களுக்கு இந்த மாநிலத்தில் வேலை கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லையென்றாலும் அடுத்த மாநிலங்களிலாவது வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதில் இரண்டு விதமான டிரெயினிங் கொடுக்கப்படுகிறது. ஒன்று, "டிப்ளமோ இன் லெதர் டெக்னாலஜி". இன்னொன்று, "டிப்ளமோ இன் லெதர் குட்ஸ் மானிபாக்சர்". தோல் பண்டங்களை உற்பத்தி செய்கின்ற பயிற்சியில் படிக்கின்றவர்கள், இதைப் பயிற்சி முடிந்த பின்னால் தாங்களாகவே ஏதாவது தொழில் செய்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில் தான் இந்தப் பயிற்சியில் சேரவேண்டும். இந்த அடிப்படையில் படிக்கின்றவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்று சொல்வது சரியாகாது. தாங்களாகவே தொழில் செய்து கொள்வதற்குத் தகுந்த அளவில் தான் இந்தப் பயிற்சி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது தான் அரசாங்கத்தின் நோக்கம்.

புலவர் கா. கோவிந்தன் : தோலைக் கொண்டு தாங்களாகவே பொருட்களை உற்பத்தி செய்து கொள்வதற்குத் தகுந்த முறையில் கொடுக்கப்படுகின்ற பயிற்சிக்கு இந்த வருடமும் இடம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு ஏதாவது வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தாங்களாகவே வேலை செய்து கொள்ளலாம் என்று நினைக்கின்றவர்கள் தான் இந்தப் பயிற்சியில் சேரவேண்டும். அந்த நம்பிக்கை இல்லாதவர்கள் இந்தப் பயிற்சியில் சேரக்கூடாது என்பதைச் சர்க்கார் விளக்கமாகச் சொல்லியிருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, தோல் பதனிடும் தொழிலும், தோல் உற்பத்தித் தொழிலும் சென்னையில் அதிகமாக இருக்கின்றன. ஆகவே இந்தப் பயிற்சி பெற்று வருகிறவர்களுக்கு வேலை வாய்ப்பு செய்து கொடுக்கின்ற முறையில் அரசாங்கமே முன் வந்து, தோல் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கான ஒரு தொழிற்சாலையை அமைக்க முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது சர்க்கார் சில லெதர் குட்ஸ் யூனிட்டுகளை வைத்திருக்கிறது. ஆனால் தனியார்த் துறையில் தான் இந்தத் தொழில் ஏராளமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால் சர்க்கார் மேலும் அமைப்பதற்கு உத்தேசமில்லை.

Textile Mills

* 562 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the rationalisation talks between labour and managements covering the textile mills in Coimbatore region are over;

(*b*) if so, the details thereof;

20th July 1964]

(c) whether the Government have any proposal to set up tribunals for similar rationalisation talks for the textile mills in Madras and Madurai regions also; and

(d) if so, when?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The Rationalisation talks between labour and managements of Textile Mills in Coimbatore region resulted in a settlement before the Commissioner of Labour on 26th December 1962 as far as the Spinning Departments were concerned. Talks in respect of other Departments are pending before the Umpire appointed for the purpose.

(b) A copy of the settlement[a] dated 26th December 1962 is placed on the Table of the House.

(c) The reference now pending before the Umpire covers both the Madurai and the Coimbatore regions. As for Madras is concerned, the Buckingham and Carnatic Mills and the Madras Labour Union have reached a settlement between themselves.

(d) Does not arise.

திரு. கே. ஏ. மதியழகன்: ஸார், மேஜைமீது வைத்துள்ள அறிக்கையில் . .

. . . "In respect of mills in Annexure 'B' the wages payable for existing work assignments in the said mills shall be submitted to the Arbitration by the Minister for Labour, Honourable Sri M. Bhaktavatsalam and his decision shall be final and binding on the managements and workers of the said mills."

என்றிருக்கிறது. இது சம்பந்தமான முடிவுகள் ஏற்பட்டு விட்டனவா? அப்படியானுல் அதன் விவரங்களைத் தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது சம்பந்தமாக லேபர் மினிஸ்டர் அவர்கள் தீர்ப்பு கொடுத்துள்ளார்கள், 20-12-1963-ல் தீர்ப்பு கொடுக்கப்பட்டது. இதனுடைய முழு விவரங்களும் வேண்டுமென்றால், தனிக் கேள்வி போட்டால் இந்த விவரங்களை மேஜை மீது வைக்கலாம். குறிப்பாக இதிலுள்ள விவரங்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்றால், பீஸ் வீவர்சுக்கு 82 ரூபாய்க்குக் குறையாமலும், டாப்பிங்—பாய்ஸ்களுக்கு 50 ரூபாய்க்குக் குறையாமலும் இருக்கவேண்டும் என்பது தான்.

Offences under Removal of Untouchability Act

* 563 Q.—SRI P. K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) how many prosecutions were launched under the Removal of Untouchability Act for the last five years; and

(b) the details thereof?

a Printed as Appendix I on pages 413-421.